( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

MC No. 3/2024

| | | |
|---|---|---|
| Name | : சாதனா | **P.W.1** |
| Father/Husband Name | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : 15-04-2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2025

**குறுக்கு விசராணையின் தொடர்ச்சி – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. எனது திருமணத்திற்கான செலவுகளை எனது பெற்றோர் தான் செய்தார்கள் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமண மண்டபத்திற்கு கொடுத்த வாடகைக்கு வழங்கப்பட்ட ரசீது என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரிலுள்ள வீடானது என் பெயரில் கிரையம் ஆகி உள்ளதா என்றால் ஆமாம். வங்கி இருந்து கடன் பெற்று தான் மேற்படி வீட்டை நான் வாங்கினேன் அதற்கு நான் EMI தொகை செலுத்தி வருகிறேன். மாதம் ரு. 80 ஆயிரம் EMI தொகையாக செலுத்தி வருகிறேன். நான் கடனை SBI வங்கி சேலையிரில் பெற்று தற்போது SBI வங்கி எக்மோர் கிளைக்கு மாற்றி கொண்டேன். வங்கியில் நான் Memorandum of understanding of title deeds எழுதி கொடுத்தேன். மேற்படி Memorandum of understanding of title deeds ஆவணத்தின் தகலை இந்நீதிமன்றத்தில் தாக்க் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரூ. 80 ஆயிரத்தை நான் ரொக்கமாக செலுத்துகிறேனா அல்லது ஆன்லைன் பரிவர்த்தனை செய்கிறேனா என்றால் ஆன்லைன் மூலமாக தான் செலுத்துகிறேன். நான் எத்தனை வருடங்களாக software நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 13 வருங்களாக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் மனு தாக்கல் செய்வதற்கு 6 மாதங்களுககு முன்னர் இருந்து பணியில்லாமல் உள்ளேன். நான் பணிபுரிந்த காலத்தில் மாத சம்பளம் அனைத்தும் என் வங்கி கணக்கிற்கு ஆன்லைன் மூலமாக வரவு வைக்கப்படும். கடைசியாக நான் பணிபுரிந்த நிறுவனத்தின் பெயர் என்ன என்றால் Bank of America. நான் Bank of America நிறுவனத்தல் இருந்து Resign செய்தற்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் (சாட்சி தானாக முன் வந்து தன்னுடைய payroll ல் ADECCO personnall Pvt.Ltd என்ற நிறுவனத்தின் பெயர் தான் குறிப்பிட்டு இருக்கும் என்று சாட்சியம் அளிக்கிறார்). நான் வேலைக்கு செல்லதற்கு காரணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை நான் எனது குழந்தையை பார்த்து கொள்வதற்காக தான் பணியில் இருந்து Resign செய்து விட்டேன்.

3. நான் எனது வங்கி கணக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இந்தியாவில் வைத்து இருக்கும் வங்கி கணக்கினை தாக்கல் செய்ய இயலும். சிங்கப்பூரில் இருந்தபோது வைத்து இருந்த வங்கி கணக்கு தற்போது என்னால் இயக்கப்படவில்லை. தற்போது நான் வங்கி கணக்குகளை நீதிமனறத்தில தாக்கல் செய்யவில்லை. குழந்தையை நான் தான் படிக்க வைக்கிறேன் என்றால் ஆமாம். எனது குழந்தையின் பள்ளி கட்டணத்தை நான் எவ்வாறு செலுத்துகிறேன் என்றால் ஆன்லைன் மூலமாக தான் செலுத்துகிறேன். நான் குழந்தையின் பள்ளி கட்டண ரசீதுகளை இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள Assets and libalities ல் பத்தி 6 ல் குறிப்பிட்டுள்ள மாத செலவுகளான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள வீட்டு முகவரியை தவிர வேறு ஒரு வீடும் பொலச்சேரியில் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். நான் இரண்டாவது வீட்டிற்குண்டான EMI தொகையை எவ்வளவு செலுத்துகிறேன் என்றால் முதல் வீட்டிற்குண்மான EMI தொகை முடிந்து விட்டது. இரண்டாவது வீட்டிற்குண்டான EMI தொகை தான் மேற்சொன்னவாறு ரூ. 80 ஆயிரம் செலுத்தி வருகிறேன் ஒரு வீட்டை வாடகை விட்டு விட்டு மற்றொரு வீட்டை நான் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். நான் மேற்படி இரண்டு வீட்டி்கும் கடன் வாங்கிய விவரங்களையும் மற்றும் ஒரேவீட்டிற்கு EMI செலுத்திவிட்டதாக சொல்லப்படுவதற்குண்டான ஆவணங்களை நிதிமன்றத்தில் மதாக்கல் செய்யவில்லை. எனது தாயார் என்னுடைய பாதுகாப்பில் உள்ளார் என்றால் ஆமாம். நான் திருப்பூர் மாவட்டத்தில் வளர்ந்தேன். எனது சொந்த ஊர் நாமக்கல். எனது சொந்த ஊரில் வீடு நிலங்கள் இல்லை. திருப்பூரில் நிலங்கள் உள்ளதா என்றால் உள்ளது. எனது அம்மா பெயரில் தான் உள்ளது. திருமணத்தின்போது நானும் என் தாயாரும் வாடகை வீட்டில் தான் இருந்தோம் என்றால் ஆமாம். திருமண சமயத்தில் எதிர்மனுதாரரும் அவருடைய பெற்றோருடன் வாடகை வீட்டில் இருந்தார் என்றால் ஆமாம். இதுவரை வாடகை வீட்டில் தான் எதிர்மனுதாரார் மற்றும் அவரது பெற்றோர் உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாங்கிய இரண்டு சொத்துகளில் ஏதாவது ஒரு சொத்தினை என்னுடைய குழந்தையின் பெயரில் வாங்க முயற்சி செய்தேனா என்றால் நான் கடன் வாங்கி சொத்துகள் வாங்கியதால் குழந்தையின் பெயரில் வாங்கவில்லை.

4. நான் எனது குழந்தைக்கு சொத்தை கொடுப்பதற்கு முயற்சி ஏதாவது செய்தேனா என்றால் எனது குழந்தைக்கு எப்போது கொடுக்கவேண்டுமோ அப்போது கொடுப்பேன். எனது வங்கி கணக்கிற்கு மாதம் ரூ. 10 ஆயிரம் எதிர்மனுதாரர் செருலுத்தி வருகிறாரா என்றால் என்னுடைய குழந்தையின் HDFC வங்கி ஈரோடு கிளை வங்கி கணக்கிற்கு செலுத்தி வருகிறார். எனக்கு தெரியாமல் அவர் பணம் அனுப்பியதால் நான் புகார் கொடுத்து அதன் பின்னர் மீண்டும் பணம் செலுத்தி வருகிறார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்னர் தான் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த புகாரின் காரணமாக தான் இந்த மனுவினை தாக்கல் செய்தேன். நான் காவல் நிலையத்தில்

கொடுத்த புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் HMOP வழக்கில் CSR தாக்கல் செய்துள்ளேன். நான் என்னுடைய மனுவிலும் Affidavit of Assets adn liabilities லும் எதிர்மனுதாரர் மாதம் ரூ. 10 ஆயிரம் செலுத்துகிறார் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் இல்லை.

5. நான் வேலை இல்லை என்று சொல்லவதால் எதிர்மனுதாரிடம் இருந்து எனக்காக ஏன் ஜீவானாம்சம் கேட்கவில்லை என்றால் நான் 6 மாதங்களாக தற்போது தான் வேலை இல்லாமல் உள்ளதால் இனிமேல் தான் எனக்காக மனு தாக்கல் செய்ய வேண்டும். நான் work from home ல் இன்றுவரை வேலை செய்வதால் தான் எனக்காக ஜீவானாம்சம் கேட்டு மனுதாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எத்தனை வருடங்களாக எனது வங்கி கணக்கை பராமரித்து வருகிறேன் என்றால் 2011 ஆம் வருடத்தில் இருந்து பயன்படுத்தி வருகிறேன். நான் எந்த மாற்றமும் செய்யாமல் ஒரே வங்கி கணக்குதான் பராமரித்து வருகிறேன். 2011 வருடத்தில் இருந்து தற்போது வரையிலான உள்ள வங்கி கணக்கை நீததிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தாக்கல் செய்கிறேன்.

**எதிர்மனுதாரர் கேட்டு கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d- N.Anupriya, 16.04.2025

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.